# வால்மார்ட் பன்னாட்டு நிறுவனத்தால் இந்தியாவுக்கு ஆபத்து

உலகெங்கும் வால்மார்ட் தனது நேரடி வணிகம், பொருட்களின் விநியோகம் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பில் ஈடுபட்டுவருகிறது. வால்மார்ட் நிறுவனம் தனது வாணிக பேராதிக்கத்தின் மூலம் தொழிற்சங்கங்களை எதிர்த்தல், சுற்றுச்சூழலை பாதித்தல், உற்பத்தியாளர்களை நசுக்குதல், சிறு வியாபாரிகளை ஒடுக்குதல் மற்றும் உள்நாட்டு சட்ட மற்றும் விதிகளை எதிர்த்தல் போன்ற சமூக, பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளூர் சமூகங்களை பாதிப்படையச் செய்துள்ளது.

2004ஆம் ஆண்டு வால்மார்ட் நிறுவனத்தின் சர்வதேச மொத்த விற்பனை 56,27,700 கோடி டாலராகும். இந்த அமெரிக்க பன்னாட்டு நிறுவனத்தின் மொத்த விற்பனையில் 19.7% கனடா, மெக்சிகோ மற்றும் பிரிட்டன் நாடுகளின் விற்பனை மட்டும் 39,000 கோடி டாலராகும், இது வால்மார்டின் 2003ம் ஆண்டு சர்வ தேச விற்பனையில் மூன்றில் நான்கு பங்காகும். வால்மார்டின் மொத்த விற்பனையில் 10 விழுக்காடு பிரிட்டனில் மட்டும் நடைபெறுகிறது. விற்பனையில் மட்டும் வால்மார்ட் உலகின் முதல் 25 நிறுவனங்களின் பட்டியலில், இடம் பெறுகிறது. 2004ல் இதன் மொத்த விற்பனை 11.3% ஆக உயர்ந்துள்ளது. மேலும் சர்வதேச விற்பனை 18.3% ஆக உயர்ந்துள்ளது. 2010ஆம் ஆண்டு இதன் லாபத்தில் 30% சர்வதேச விற்பனை மூலம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விற்பனை வளர்ச்சி ஆண்டு-தோரும் சீனா, கொரிய மற்றும் பியார்டோரிகாவில் உயர்ந்து வருகிறது. வால்மார்டின் நடவடிக்கைகள் உள்ளூர் அரசு சட்டங்களுக்கு எதிராக உள்ளதால் பியார்டோ-ரிகா, அர்ஜென்டினா, மெக்சிகோ மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால் வால்மார்டிற்கு ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பட்டியல் 63லிருந்து 75 ஆக அடுத்த இரண்டாண்டுகளில் உயரும். இதில் சீனாவின் கொள்முதல் பங்கு உயரும்.

வால்மார்ட் 35 தனியார் பிராண்டுகளை பயன்படுத்தி உலகெங்கும் தனது பொருட்களை விற்பனை செய்கிறது. ஆடைகள் (ஜார்ஜ்), மின்னணு பொருட்கள் (டூரா பிராண்ட்) வைட்டமின்கள் (சிபிரிங் வாலி), வாசனை மற்றும் அழகு சாதனங்கள் (நோ

அதர் பவுண்டரீஸ்) ஆகிய பிராண்டுகளை பயன்படுத்துகிறது. வால் மார்டின் விற்பனையில் 20% பிற தனியார் பிராண்டுகளாகும். வால்மார்ட் தனது பொருட்களை விற்க 20 லைசென்ஸ் ஒப்பந்தம் செய்துள்ளது. அவை பின்வருமாறு :- பெட்டர் ஹோம்ஸ், எலெக்டிரிக் கம்பெனி மட்டுமல்லாமல் வால்மார்ட் ஸ்டார்டர், சாராலீ, பிளாக் & டெக்கர், பிலிப்ஸ், சன்பீம், ரஸ்ஸல், ஹெவலட் பெக்கார்டு, ரேடியோ பிளையர், சோனி மற்றும் லெலிஸ் ஆகிய தேசிய பிராண்டுகளையும் விற்று வருகிறது.

வால்மார்ட் தனது மைய்யப்படுத்தப்பட்ட விநியோக முறை மூலம் குறைந்த விலையில் விற்பனை செய்யும் கடைகளை அதிகப்படுத்தி வருகிறது. அது மட்டுமல்லாமல் உலகெங்கும் தனது புதிய விநியோக மையங்களை விரிவுபடுத்தி வருகிறது. 2005 நடப்பு ஆண்டில் மட்டும் இத்தகைய விநியோக மையங்களிலிருந்து 75% கொள்முதல் சர்வதேச விற்பனைக்காக செய்தது. பொருட்களை கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்கான வால்மார்ட் விநியோக மையங்கள் மூலம் தனது சர்வதேச வணிகத்திற்கு தேவையான 76% பொருட்களை கொள்முதல் செய்தது. சர்வதேச சந்தையிலிருந்து பொருட்கள் இம்மையங்களுக்கு வருகின்றன. வால்மார்டிற்கு கலிபோர்னியா, புளோரிடா, பென்சில்வேனியா போன்ற இடங்களில் விநியோக மையங்கள் உள்ளது. மேலும், அர்ஜென்டினா, பிரேசில், கனடா, சீனா, ஜெர்மனி, மெக்சிகோ, பியோர்டா ரிகா மற்றும் பிரிட்டன் நாடுகளில் இது போன்ற 58 விநியோக மையங்கள் உள்ளன.

## உலகெங்கும் வால்-மார்ட் தொழிலாளர்களையும் தொழிற்சங்கங்களையும் தாக்குகிறது

அமெரிக்காவில் பெண் தொழிலாளர்களுக்கு எதிரான பாலியல் பாகுபாடு நடவடிக்கையால் இது வழக்கை சந்தித்து வருகிறது. உடல்நல காப்பீடு தொழிலாளர்களுக்கு வழங்காததால் பல பெருவாரியான அமெரிக்க மாநிலங்களில் வழக்குகளை எதிர் கொள்கிறது. கூட்டு ஒப்பந்தத்திற்கு பதிலாக தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நேரடி பேச்சு வார்த்தையில் ஈடுபடக் கோரிய வால்மார்ட் தொழிலாளர்களை ஒழித்துக்கட்ட தனது கடையை கனடாவில் இழுத்து மூடியது.

பிரிட்டனில், வால்ட்மார்ட் விநியோக மையத்தின் தொழிற்சங்கம் மூலம் ஊதிய உயர்வு பேச்சு வார்த்தையில் ஈடுபட கோரிய தொழிலாளர்களை சலுகைகள் தருவதாக வாக்குறுதி தந்து யூனியனை ஒழிக்க நினைத்தது ஆனால் தொழிலாளர்கள்

யூனியனை விட்டுக்கொடுக்காததால் வழக்கை சந்திக்க உள்ளது. இது போல சீனா, பிரேசில், ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளில் தொழிற் சங்கத்தை முடக்க வால்மார்ட் மோதிவருகிறது.

**வால்-மார்ட் சிறு வியாபாரிகளை அழிக்கிறது**

மெக்சிகோவில் நூற்றுக்கணக்கான சிறு வியாபாரிகள் தங்கள் விற்பனையை இழந்து கடைகளை மூடிவிட்டார்கள். பிரிட்டனில் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த உணவு விற்பனை கடைகள் அழிந்து வருகின்றன. அமெரிக்காவில் சிறு வியாபாரிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதால் வேலை வாய்ப்பிழந்தோர் பட்டியல் உயர்ந்து வருகிறது.

வால்-மார்டின் குறைநததரம் மற்றும் பிற வாணிபத்தை அழிக்கும் செயல்களுக்கு எதிராக அமெரிக்க மாநிலங்கள் மற்றும் சில நாடுகள் தங்கள் சமூகத்தை பாதுகாக்க சட்டங்களை கொண்டுவரும் போதெல்லாம், வால்மார்ட் தனது செய்முறைகளையும் கொள்கைகளையும் மாற்றுவதற்குப் பதில் அதிக பொருட் செலவில் இது போன்ற முயற்சிகளுக்கு எதிரான பிரச்சாரத்தை மேற் கொள்கிறது இது போன்ற நடவடிக்கைகளில் அரிசோனா, கலிபோர்னியா போன்ற அமெரிக்க மாநிலங்களிலும் அர்ஜென்டினா, பியோர்டா ரிகா போன்ற நாடுகளிலும் வால்மார்ட் ஈடுபட்டு வந்துள்ளது.

**வால்மார்ட் உற்பத்தியாளர்களை நசுக்குகிறது**

வால்மார்ட் நிறுவனத்திற்கு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் அதிக அளவு தொழிலாளர் உரிமைகள் மீறப்படுகின்றன. வால்-மார்ட் தனது உற்பத்தியாளர்களிடம் குறைந்த செலவில் பொருட்களை உற்பத்தி செய்ய வற்புறுத்துவதே இதற்கு மூல காரணமாகும். ஏனெனில் இது போன்ற வால்-மார்டின் வற்புறுத்தலுக்கு ஈடு கொடுக்க கம்பெனிகள் சம்பளமில்லாத அதிக நேர வேலை, வேலைப்பளுவை அதிகரித்தல் மற்றும் குறைந்தபட்ச கூலியை விட குறைவான ஊதியம் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. வால்-மார்டிற்கு உற்பத்தி செய்த பிளாஸ்டிக் பிக்கில் நிறுவனத்திற்கு இத்தகைய விலை அழுத்தத்தால் பல கோடி டாலர் இழப்பு ஏற்பட்டுள்ளது. அதே சமயம் வால்-மார்டின் லாபம் அதிகரித்தது.

**வால்-மார்ட் சுற்றுச்சூழலை அழித்து வருகிறது**

வால்-மார்ட் சுற்றுச்சூழலை பாதிக்கும் செயல்களில் ஈடுபடும் பன்னாட்டு நிறுவனங்கள் பட்டியலில் முன்னணியில் உள்ளது.

குறிப்பாக 2001ல் அமெரிக்காவின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு (EPA) வால்-மார்ட் மாசற்ற நீர் சட்டத்தை 17 இடங்களில் மீறியதற்காக நடவடிக்கை எடுத்துள்ளது. ஒரு கம்பெனிக்கு எதிரான சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு பல மாநிலங்களில் நடவடிக்கை எடுத்தது இதுவே முதன்முறையாகும்.

**இந்தியாவில் நுழையும் வால்-மார்ட்**

இந்தியாவில் வால்-மார்ட் நுழைவதால் ஏற்படும் அபாயம் குறித்து உலகின் மிகப்பெரிய தொழிற் சங்கமான யூனியன் நேட்வொர்க் இண்டர்நேஷனல் இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளது. இந்த தொழிற்சங்கத்தின் 1 கோடியே 40 லட்சம் உறுப்பினர்கள் உள்ளார்கள். இது பின்வரும் பாதிப்புகள் வால்மார்டால் ஏற்படும் எனக் கூறுகிறது :- இந்தியாவின் பொருளாதார ஒருங்கிணைப்பு செயல் திட்டத்தை பாதிக்கும், வால்மார்டின் விலை அழுத்தப் போக்கினால் ஏற்படும் போட்டியினால் வியாபார சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகள் பாதிப்படைவார்கள், மற்றும் வால்-மார்டிற்கு பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் குறைந்த விலை நிர்ணயத்தால் நட்டமடைவார்கள்.

வாணிகத்தில் ஈடுபடும் நிறுவனங்களின் தொழிலாளர்கள் பாதிப்படைவார்கள், எனவே இதனால் சமூக பாதிப்பு ஏற்படும். வால்மார்ட் இந்தியாவில் பெருகிவரும் 3 கோடி 50 லட்சம் நுகர்வோர்களின் சந்தையை பிடிக்கும்.

வால்-மார்ட் நிறுவனத்தின் இயக்குனர் திரு.ஜான் மென்சர் அண்மையில் இந்திய பிரதமரை சந்தித்து தனது நிறுவனத்தின் இந்திய கொள்முதல் அசலை காட்டி இந்திய சந்தையை வால்மார்டிற்கு திறந்து விட கோரினார். தற்போது இந்தியாவிலிருந்து வால்மார்ட் 21,000 கோடி டாலருக்கு பொருட்களை கொள்முதல் செய்கிறது. இது அடுத்த 5 ஆண்டுகளில் 30,000 கோடி டாலராக உயரும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியா நேரடி வணிக சந்தையின் அளவு 25,000 கோடி டாலராகும், மேலும் ஆண்டொன்றிற்கு 7.2% வளர்ச்சியடைந்துவருகிறது. மேலும் நாட்டின் மொத்த

பொருளாதாரத்தில் (GDP) 14% நேரடி வணிகத்தின் மூலம் கிடைக்கிறது. இந்தியாவில் 1 கோடி 20 லட்சம் வணிகர்கள் நேரடி விள்பனையில் ஈடுபட்டு வருகிறார்கள். வால்மார்ட் இந்தியாவில் நுழைந்தால் இந்த வணிகர்களில் 98% பாதிப்படைவார்கள். வால்மார்டிற்கு அமெரிக்காவில் மட்டும் 3,600 பெருங்கடைகள் உள்ளன மற்றும் பிற நாடுகளில் 2,000 பெருங்கடைகள் உள்ளன. இதில் சினாவில் 45 கடைகள் உள்ளது. இவற்றில் அனைத்து விதமான நுகர்வுப் பொருட்களும் விற்கப்படுகின்றன. 2004 ஆம் ஆண்டு வால்மார்டின் மொத்த லாபம் 10,000 கோடி டாலராகும், இந்தியாவில் 1 கோடி மக்கள் நேரடி வாணிகத்தில் நேரடியாகவும் மறைமுகமாக 3 கோடி மக்களும் சில்லரை வியாபாரத்தை நம்பி வாழ்கிறார்கள். 4 1/2 கோடி குடும்பங்கள் கடைகள் வைத்து பிழைப்பை நடத்துகிறார்கள். இந்தியாவில், இவர்களது வாழ்வில் மண்ணை அள்ளி போட வால்மார்ட் வருகிறது. இந்தியாவில் வணிகத்தில் நேரடி அந்நிய முதலீட்டை பன்னாட்டு நிறுவனங்களுக்கு திறப்பதன் மூலம் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 5% பேர் பாதிப்படைவார்கள்.

வால்-மார்ட்டில் தொழிலாளர்களின் அடிப்படை உரிமையாக சங்கம் சேரும் உரிமை மற்றும் சுதந்திரமாக சங்கம் அமைக்கும் உரிமை முழுவதும் நிராகரிக்கப்படும். சமூகத்தில் வியாபாரம் செய்யும் மக்கள் வேலை வாய்ப்பை இழப்பார்கள். பெண் தொழிலாளர்கள் பாலின பாகுபாட்டிற்கு உள்ளாவர்கள். உற்பத்தியாளர்கள் விலையை குறைக்கும் அழுத்தத்தால் பாதிப்படைவார்கள் தொழிலாளர்களையும், பொருட்களை உற்பத்தி செய்பவர்களையும் பாதிப்படையச் செய்யும் உயர்மட்ட நிர்வாகத்தினர் மற்றும் பங்குதாரர்கள் மட்டுமே பலன் அடைவார்கள். நமது நாட்டின் பொருளாதாரம் வால்-மார்டின் வர்த்தக அழுத்தத்தால் பாதிப்படையும்.

மேற்கண்ட காரணங்களால் இந்திய தொழிற்சங்கங்களும். வணிகர் சங்கங்களும், சமூக அக்கறையுள்ளவர்களும் மற்றும் அரசியல் கட்சிகளும் வால்-மார்டை இந்தியாவில் நுழைய விடாமல் தடுக்கவேண்டும்.

**மொழியாக்கம் அக்கறை அறக்கட்டளை (CARE Trust E.mail:caretn@rediffmail.com)**

**Published by SARDI E.mail:info@sardi.org**